## அறிமுகம்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆலய நிர்வாகம் அருட்பணியோடு அறிவுப்பயிரை வளர்க்கும் நோக்கோடும், பெண் கல்வியின் மேம்பாடு மற்றும் முன்னேற்றம் கருதியும், 1970–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் முதல் நாள் இக்கல்லூரியைத் தோற்றுவித்தனர். இதன் தோற்றத்திற்கு தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறையும், இத்திருக்கோயில் நிர்வாகமும் இணைந்து செயல்பட்டன.

அறநிலையத்துறை சார்புடைய கல்லூரியாக இருப்பதால் இந்நாட்டின் கலை, பண்பாடு, பக்தி, பாரம்பரியம் ஆகியவற்றைக் காப்பதோடு தினமும் வழிபாடு மற்றும் மன்றங்களின் செயல்பாடுகள் சிறந்த முறையில் நடைபெறுகின்றன. முருகனின் திருவருளால், அர்ப்பணிப்பு எண்ணம், அறச்சிந்தனை, சேவை நோக்கம், விரைந்து செயலாற்றும் திறன், நாட்டுப்பற்று ஆகிய எண்ணங்கள் வளர்ந்திட இக்கல்வி நிறுவனம் செயல்படுகிறது.

இப்பாரம்பரியம் மிக்க கல்லூரியில் கிராமப்புற மாணவியர் பயன்பெறும் வகையில் 1998ஆம் ஆண்டு சுயநிதிப் பாடப்பிரிவு தொடங்கப்பட்டது. தற்போது **தேசிய தர மறுமதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் B++ தகுதி** பெற்றதோடு 2004–05ஆம் கல்வியாண்டு முதல் **தன்னாட்சிப்** பொறுப்புடன் கல்விப்பணி ஆற்றி வருகின்றது.

## நுழைவு விதிகள்

1. இக்கல்லூரிக்கு நுழைவு விதிகள் அனைத்தும் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்டது.
2. மாணவியர் சேர்க்கைக்குத் தேர்வு செய்ய பெற்றவர்கள் அசல் மாற்றுச்சான்றிதழைக் கட்டாயம் ஒப்படைக்க வேண்டும்.

   குறிப்பு : அசல் மாற்றுச்சான்றிதழ் திருப்பித்தரப்படமாட்டாது. எனவே தேவையான ஒளிப்படி (ஜெராக்ஸ்) நகல்களை முன்கூட்டியே எடுத்து வைத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.
3. விண்ணப்பங்களை **apacwomen.ac.in** என்ற கல்லூரியின் இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கல்லூரியில் நேரில் சமர்ப்பிக்கும்பொழுது விண்ணப்பக் கட்டணமாக இளநிலை **(UG)** - ரூ. 100/– மற்றும் முதுநிலை **(PG)** - ரூ. 150/– செலுத்த வேண்டும். இந்த விண்ணப்பங்களை தபால் மூலம் கல்லூரிக்கு அனுப்பும்பொழுது விண்ணப்பக் கட்டணத்தை **The Principal, A.P.A. College for Women, Palani** என்ற பெயரில் **(Payable at Palani))** வங்கி வரைவோலையாக **(DD)** விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையின்றி தபால் மூலம் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
4. விண்ணப்பதாரர் தங்கள் விண்ணப்பங்களை +2 தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட பத்து நாட்களுக்குள் **கல்லூரி முதல்வர், அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, சின்னக்கலையம்புத்தூர் – 624 615** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
5. அ) தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவியரின் பெயர் பட்டியல் கல்லூரி அறிவிப்புப் பலகையில் வெளியிடப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவியருக்கு தகவல் தெரிவிக்கப்படும். தகவல் பெற்ற மாணவியர் குறிப்பிட்ட நாள், நேரத்தில் நேர்காணல் கடிதத்துடன் கல்லூரி முதல்வரை நேரில் வந்து காண வேண்டும்.

   ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவியர் கல்லூரிக் கட்டணத்தை முதல்வரால் குறிப்பிடப்பட்ட நாளில் கட்டத் தயாராக இருக்க வேண்டும். தவறினால் கல்லூரியில் சேரும் வாய்ப்பை இழக்க நேரிடும்.

   இ) கல்லூரியை விட்டு நீங்க விரும்புகிற மாணவியர் கட்டணத்தைக் கட்டிய ஏழு நாட்களுக்குள் அதுபற்றி முதல்வருக்குத் தெரிவிக்க வேண்டும். கல்லூரியில் சேர்ந்த பின்போ, அல்லது வகுப்புகள் தொடங்கிய பின்போ தொடர்ந்து ஐந்து நாட்கள் வராத மாணவியர் பெயர் பதிவெண் பட்டியலில் இருந்து நீக்கப்படும்.
6. கல்லூரியில் சேரும்போது தாங்கள் கீழ்கண்ட மூலச் சான்றிதழ்களைக் கொண்டு வர வேண்டும். தவறினால் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.
   1. நேர்காணல் கடிதம் **(Interview Card)**
   2. மேல்நிலை வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் / பட்ட வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் முதுநிலைப் பட்ட வகுப்பில் சேருவோருக்கு
   3. மாற்றுச் சான்றிதழ் **(Transfer Certificate)**
   4. மூலச் சான்றிதழ் **(Original Community Certificate)**
7. மாணவியர் பொய்யான சான்றிதழோடு கல்லூரியில் சேர்ந்திருப்பின் உடனடியாக கல்லூரியிலிருந்து நீக்கப்படுவர். அவர்கள் கட்டிய எக்கட்டணமும் திருப்பித்தரப்பட மாட்டாது.
8. கேலிவதை முயற்சியில் ஈடுபடும் மாணவியர் எவ்வித முகாந்தரமுமின்றி அரசாணை எண். (632 நாள் 19–12–96) ன்படி கல்லூரியில் இருந்து நீக்கப்படுவர்.
9. நேர்முகத் தேர்வின்போது மாணவியர் விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து அளித்துள்ள தகவலுக்கும், உண்மைச் சான்றிதழ்களில் உள்ள தகவலுக்கும் முரண்பாடுகள் இருப்பின் அம்மாணவியரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு கல்லூரியில் சேரும் வாய்ப்பை இழக்க நேரிடும்.

## சுயநிதிப்பிரிவு

**இளம்நிலை**

1. கணினி அறிவியல் (B.Sc., Computer Science)
2. வணிகவியல் மற்றும் கணினிப் பயன்பாடுகள் B.Com., (CA)
3. கணினிப் பயன்பாடுகள் (B.C.A.,)
4. இளங்கலை தமிழ் (B.A., Tamil)
5. இளங்கலை ஆங்கிலம் (B.A., English)

**முதுநிலை**

1. வணிகவியல் மற்றும் கணினிப் பயன்பாடுகள் M.Com., (CA)
2. கணினி அறிவியல் M.Sc., (Computer Science)
3. ஆங்கிலம் (M..A., English)

**சான்றிதழ் வகுப்புகள்**

1. Yoga for Human Excellence
2. Human Rights Education

**உயராய்வு மையம் (M.Phil.,)**

1. தமிழ் 2. ஆங்கிலம் 3. வரலாறு 4. வணிகவியல்

**முனைவர் பட்டப் படிப்பு (Ph.D.,)**

1. தமிழ் 2. வரலாறு